


# தமிழ்ச்சிட்டு





## சீராடுவது ஏன்?

தலைவாராமல் பூச்சூடாமல்
தனியே நின்றேன் சிணுங்குகிறாய்? -பொற்
சிலையே நீஏன் பள்ளிசெல் லாமல்
சீராடிக் கண் கலங்குகிறாய்?

வண்ணப் பட்டை இருபுறம் கட்டித்
தலையை வாரிப் பின்னிடுவேன்!—உன்
எண்ணப் படியே பட்டுச்சட்டை
எடுத்துத் தருவேன்; பூவைப்பேன்!

தோளில் பையைத் தொங்கப் போட்டுத்
துள்ளிப் போவாய் மான்போல!—ஒரு
நாளில் உனக்குப் பூக்குடை வாங்கி
நாட்டித் தருவேன் வான்போல!

காலில் செருப்பை அணிந்துகொள்வாய்!
கையை வீசிச் சென்றிடுவாய்!—பைம்
பீலி விரித்த மயிலின்குஞ்சே!
பிள்ளைக் கிளியே! மான்கன்றே!

---

அட்டைப்படப் பாப்பா: பூவிழி
பெற்றோர்: புலவர். பொன் முகிலன்—கோமதி
ஊர்: கூடலூர். (கோவை)

---

**குரல்: 11; இசை: 1.**
**விலை: 35 காசு.**

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

# கல்வெட்டு ஆராய்ச்சி பற்றிப் பாவாணர் கருத்துகள்!

பண்டைத் தமிழகம் என்பது, குமரிமுனைக்குத் தெற்கில் 2000 கல் தொலைவு வரை பரவியிருந்து, இந்துமாவாரியில் மூழ்கிப் போன குமரிக் கண்டம் என்னுந் தென் கண்டமாகும்... இக்கடல் கொண்ட நிலம் முழுதும் பழம் பாண்டி நாடு என்பதை அறிதல் வேண்டும்.

இக்கூற்று மொழிநூற் சான்றால் முழுவலி யுறுகின்றது. ஆதலால் கடல் கோட்கு எஞ்சியுள்ள இற்றைத் தமிழ் நாட்டிற் கிறித்துவிற்குப் பிற்பட்ட கோவிற் கல்வெட்டுகளில் தொல்பொருள் துறைச் சான்று காண முயலுவது, வானத்து மீனுக்கு வன் தூண்டி லிட்ட கதையாகவே முடியும். தமிழ் நாட்டு வரலாற்றிற்குத் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை இம்மியும் பயன்படாதென்பதை அறிதல் வேண்டும்.

கி.மு. 4-ஆம் நூற்றுண்டில் வட நாட்டினின்று வந்து வைகை, மதுரைச் சுற்றுச் சார்பிலுள்ள குன்றுகளில் வதிந்த சமணத் துறவியர், அங்குள்ள பாறைகளில் தமக்குத் தெரிந்த பிராமி யெழுத்தில் தமக்குத் தோன்றியதை அல்லது தாம் அறிந்ததைப் பொறித்து வைத்ததினின்று, அன்று வழங்கிய தமிழ் எழுத்தைப் பற்றி ஒரு முடிவிற்கும் வந்து விட முடியாது.

பனைமரம் தமிழகத்துக் குறிஞ்சி முல்லை நிலங்களில் தொன்று தொட்டு இயற்கையாகவும் செயற்கையாகவும் வளர்ந்து வருவது. கடிதங்கள், திருமுகங்கள், நாளோலைகள், வரவுசெலவுக் கணக்குகள், முறிகள், திட்டுகள், ஒப்பந்தங்கள், ஆவணங்கள், வணிகப் பட்டியல்கள், கைச்சாத்துகள், சுவடிகள், பொத்தகங்கள் ஆகியவை யெல்லாம் பனையேட்டில் எழுதப்பட்டு வந்தன. வளைகோடு மிக்க வட்டெழுத்துத்தான், பனையேட்டில் எழுத்தாணி கொண்டு ஏந்தாகவும் (வசதியாகவும்) இடக்கருவிச் சேதமின்றியும் எழுத வொண்ணும். நேர்கோடு மிக்க வட்டெழுத்தே, கல்லும் செம்பும் போன்ற கடினப் பொருள் மேல் உளியாற் பொறித்தற்கு ஏற்கும்.

வடமொழி முதலில் எழுதப்பட்ட கிரந்தவெழுத்து தமி ழெழுத்தின் திரிபே. கிரந்தவெழுத்தின் திரிபு வளர்ச்சியே தேவ நாகரி. அது கி.பி. 4-ஆம் நூற்றுண்டில் அரும்பி, 8-ஆம் நூற் றுண்டில் போதாகி, 11-ஆம் நூற்றுண்டில் மலர்ந்ததாக, மானியர் உவ்லியம்சு தம் சமற்கிருத ஆங்கில அகர முதலி முன்னுரையில் குறிக்கிறார் (பக். 28, அடிக்குறிப்பு). 'தேவநாகரி' என்னும் பெயரே, தேவன், நகரம் என்னும் இரு தென் சொற் கூட்டின் திரி பென்பதை அறிதல் வேண்டும்.

...கல்வெட்டுகள், கொச்சைச் சொற்களும் வேண்டா வழுச்சொற் களும் விரவியும், வரிவடிவு பிழைத்தும், வடவெழுத்துப் புகுத்தியும், இலக்கணம் இன்றியும், இடையிடை தமிழ்ப் புலவர்க்கும் பொருள் தெரியாவாறு மணிப்பவள நடையிலும், பொறிக்கப்பட்டு வந்தன.

...தமிழரசர் காலத்திலேயே தமிழ்ப் புலவர் தமிழ்க் கேட்டைத் தட்டிக் கேட்க இடமில்லாது போயிற்று. இவ்விழி நிலைமை தமிழர சொழிந்து அயலரசுகள் தோன்றிய பின் முற்றி முதிர்ந்து, ஆங்கில ராட்சியிலேயே நீங்கத் தொடங்கியது. ஆதலால், பிற்காலக் கல் வெட்டுக்களைக் கொண்டு தமிழின் தொன்மையை அறிவது ஆழியை நாழி கொண்டு அளப்பது போன்றதே. —**மண்ணில் விண்**



# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல் 11] தி.பி. 2010. மேழம் (ஏப்ரல்–மே. 1979) [இசை 1


## பயனுள்ள வகையில் விடுமுறையைக் கழியுங்கள்!

'காலம் பொன் போன்றது; கல்வி கண் போன்றது' என்னும் பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். உண்மையிலேயே காலம் பொன்னைவிட உயர்ந்தது; கல்வி கண்ணை விடச் சிறந்தது. பொன் சிறிது முயன்றால் கிடைக்கும். காலத்தைப் போக விட்டால் பின்னர் அது கிடைப்பது அரிதினும் அரிது. கல்வியும் அப்படித்தான். கண்கள் இல்லாது போனாலும் கல்வி கண்போல் இருந்து நம்மைக் காக்கும் வலிமை சான்றது. அதனால்தான்

**பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து**
**ஆள்வினை யின்மை பழி**

என்றார் திருவள்ளுவரும்.

இனி, காலமும் கல்வியும் ஒன்று சேர்ந்துவிட்டால் சொல்லவே தேவையில்லை. நமக்கு வந்து சேர்வதெல்லாம் பயனும் பெருமையு மாகவே இருக்கும்.

இப்பொழுது ஆங்காங்குத் தேர்வுகள் முடிந்து உங்களுக்குக் கோடை விடுமுறை விடப்பெற்றிருக்கும். கோடை விடுமுறை


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**
**தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005 (தமிழகம்).**

உங்களுக்குக் கிடைக்கும் நீண்ட நெடிய விடுமுறை. தேர்வு முடிவுகள் வரவே ஒரு மாதத்திற்கு மேலாகும். அதன் பின்னும் விடுமுறை குறைந்தது ஒரு மாதம் இருக்கும். உங்களுக்குக் கிடைக்கும் ஏறத்தாழ இவ் விரண்டு மாத விடுமுறையில் உங்களில் பலர் உங்கள் சொந்த ஊர்களுக்கோ-சிற்றூர்களுக்கோ, சிலர் உங்கள் உறவினர்கள் வாழும் பெரிய நகரங்களுக்கோ செல்வீர்கள். அங்கெல்லாம் கிடைத்த விடுமுறையைப் பயனின்றிக் கழிப்பவர்களே உங்களில் பலராக இருப்பீர்கள். விடுமுறையைப் பயனுள்ள வகையில் கழிப்பவர்கள் உங்களில் சிலராக இருக்கலாம்.

பெரும்பாலும் இக்காலத்தில் இளைஞர்கள், சிறுவர்கள் என்பாரில் பலர் காலத்தை மிக எளிதாகக் கருதி, அதனை வீணாகவே கழிக்கின்றனர். சிலர் பள்ளி விடுமுறை என்றாலே, காலையில் நெடுநேரம் கழித்து எழுகின்றனர். அதன்பின் அவர்கள் குளித்து முழுகி, உண்டு உடுப்பதற்குள் முற்பகல் ஆகிவிடும். அதன் பின்னர் உள்ள பொழுதை அவர்கள் விளையாட்டிலோ, அரட்டை அடிப்பதிலோ கழித்து விடுகின்றனர். மாலையிலும் இதே கதைதான். சோம்பேறிகள் சிலர் விளையாட்டில் கூட ஈடுபட விருப்பமற்றவர்களாய்க் கதைகள் பேசியே காலத்தைப் போக்கி விடுபவர்களாக இருக்கின்றனர். கதைகள் என்றாலும் என்ன கதைகள் என்று நினைக்கின்றீர்கள். ஒரு காசுக்கும் பயனற்ற வெற்றுத் திரைப்படக் கதைகள்தாம்! திரைப் படம் வந்தாலும் வந்தது. நம் இளைஞர்கள் பேசுவது, பாடுவது, நகைப்பது எல்லாம் அதில் உள்ள செய்திகளாகவே போய்விட்டன. அவற்றைத் தவிர வேறு எதைப் பற்றியும் அவர்களுக்குப் பேசத் தெரியவில்லை; அத் திரைப்படப் பாடல்களைத் தவிர வேறு பாடல்களை அவர்களுக்குப் பாடத் தெரிவதில்லை. நகைச்சுவை என்றால் அந்தத் திரைப்பட நகைச்சுவை தான்! அறிவும் ஆர்வமும் எத்துணையளவு இழிந்து போய் விட்டன!

இப்பொழுதெல்லாம் இளைஞர்கள் தன்னறிவுக்கும் தன் முயற்சிக்கும் இடம் கொடுப்பதே இல்லை. தாமாகவே சிந்தித்துத் தாமாகவே முயற்சி செய்யும் எந்த வினைப்பாட்டிலும் அவர்கள் ஈடுபடுவதே இல்லை. அவர்கள் முயற்சியில் அல்லது வினைப்பாடுகளில் முழுவதும் பற்றியிருப்பது திரைப்பட உணர்வே தான். பிழை அவர்களுடையதில்லையென்றாலும், அதனால் தாக்கமுறுவது அவர்கள் தாம். அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்குவது பெரும்பாலும் அரசியல் சூழல்களே! ஆட்சியாளர்களின் கவலையற்ற தன்மையால்தான் திரைப் படங்களும் கீழ்மை உணர்வுகளை வளர்க்கும் கலையிதழ்களும் இளைஞர்களை ஆட்டிப் படைக்கும் பெரும் ஆற்றல்களாக வளர்ந்து, நச்சு மரங்களைப் போல் இந்த நாட்டையும் எதிர்காலத்தையும் அரித்து வருகின்றன. எனவே, இளைஞர்கள் தங்களைத் தாங்களாகவே காத்துக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாய நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தப் பெற்றுள்ளனர். இந்த நிலையைச் சரிவர உணர்ந்து

கொண்டு தன்னை நிலைப்படுத்திக் கொள்ளாத எந்த இளைஞனும் தன் எதிர்காலத்தை இழப்பது உறுதி என்னும் அவல நிலையை எடுத்துச் சொல்லியே ஆகல் வேண்டும்.

ஆகவே, தங்கள் பள்ளி நேரங்களைத் தவிர்த்து, ஆசிரியர்கள் பாங்கில் தாங்கள் காக்கப்படும் அந்த பொறுப்புமிக்கச் காலத்தினின்று விடுபட்டுத் தங்களைத் தாங்களே வழி நடத்திக் கொள்ளும் அல்லது காத்துக்கொள்ளும் விடுமுறை போலும் காலங்களை மிகமிக எச்சரிக்கையாகக் கழிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இக்காலத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் என்ன படிக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்றுகூடக் கவனிப்பதற்கில்லாமல்—இயலாமல் இருக்கின்றார்கள். இன்னுஞ் சொன்னால் பெற்றோர் பலரும், இன்றைய நிலையில், தங்கள் பிள்ளைகளை அடக்கும் ஆற்றல் அற்றவர்களாகவும் இருக்கின்றனர். ஏனென்றால் தங்கள் பிள்ளைகள் செய்யும் அதே வகையான பிழைகளைத்தாம் அவர்களும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எனவே, **தமிழ்ச்சிட்டுப்** படிக்கும் தம்பி தங்கைகளாகிய உங்களுக்காகிலும் சிலவற்றை எச்சரிக்கையாகச் சொல்லியாக வேண்டியிருக்கின்றது. நீங்கள் கட்டாயம் இப்பொழுது கிடைத்த விடுமுறைக் காலத்தை மிகவும் பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும். ஓய்வு நேரத்தில் உங்களுக்கு எளிதில் விளங்காத பாடப் பகுதிகளை மீண்டும் ஒருமுறை அல்லது இருமுறை படித்துப் பாருங்கள். உங்கள் தமிழ், ஆங்கில அறிவை அண்டை அயலிலுள்ள ஆசிரியர்கள், பெரியோர்கள் வழியாகப் பெருக்கிக் கொள்ளுங்கள். சிலர்க்குக் கணக்கு அவ்வளவு எளிதில் வராது. அத்தகையவர்கள் கணக்குத் தெரிந்த மற்றவர் வழி, தங்கள் கணக்கறிவை வளர்த்துக் கொள்ளலாம். தங்கள் பாடங்களில் ஓரளவு ஈடுபாடுள்ள மாணவர்கள், அருகிலுள்ள நூலகங்களுக்குச் சென்று பொதுஅறிவு, அறிவியல், அறநெறி நூல்களைப் பெற்றுப் படித்துத் தங்கள் அறிவை விரிவாக்கிக் கொள்ளலாம். மற்றும் ஓவியந் தெரிந்தவர்கள், பாட்டு எழுதத் தெரிந்தவர்கள், கதை, கட்டுரை எழுத விருப்பமுள்ளவர்கள் அவ்வத் துறைகளில் தங்கள் ஈடுபாட்டுப் பயிற்சியை வளர்த்துக் கொள்ளலாம். இவை தவிர, சில பொழுதுகளை நல்ல விளையாட்டுகளிலும் கழிக்கலாம். ஆனால் எந்த வகையான பொழுது போக்கும் உங்கள் மனத்திற்கோ, அறிவுக்கோ, உடலுக்கோ நலந்தரும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அவற்றை ஊறுபடுத்தி நல்லுணர்வுகளைச் சிதைக்கின்ற எந்த ஈடுபாட்டிலும் நீங்கள் ஈடுபடவே வேண்டாம். அவற்றில் ஈடுபட்டு உங்களை நீங்களே அழித்துக்கொண்டு, உங்கள் பிறங்கடையினரையும் அழிக்க முற்படுவதைவிட, நீங்கள் ஒன்றுமறியாத மூடர்களாக இருப்பதே மேல் என்று கருதிக் கொள்ளல் வேண்டும்.

**—பெருஞ்சித்திரனார்.**

# நிலாவைப்பற்றி நீங்கள் அறிவீர்களா?

நாள்தோறும் நிலாவை நாம் பார்த்துக்கொண்டேயிருக்கிறோம். ஆனால், நம்மில் பலருக்கு அந்த நிலாவைப்பற்றி, எவ்வளவு விளத்தங்கள் தெரியும்? நிலாவைப் பற்றிய பல சிக்கல்கள் குறித்த அறிவியலாரின் ஆய்வுகள் இன்றும் முடிந்தபாடில்லை. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள விளக்கங்களையாகிலும் நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

நிலாவின் விட்டம் நிலத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு குறைவு. நிலவுலகின் பொருண்மையைக் காட்டிலும் அதன் பொருண்மை 18 மடங்கு குறைவு. அதன் ஈர்ப்பு விசை, நிலத்தின் ஈர்ப்பு விசையில் ஆறில் ஒரு பங்குதான். நிலத்தை அது சுற்றி வரும் வேகம் சராசரியாக நொடிக்கு ஓர் அயிர மாத்திரி (கிலோ மீட்டர்). அது நிலத்தைச் சுற்றும் சுழல்பாதை, ஏறக்குறைய வட்ட வடிவமானதே, அந்த வட்டத்தின் ஆரம், 384400 அயிர மாத்திரிகள் (கிலோ மீட்டர்கள்). எப்பொழுதும் நிலாவின் ஒரு பகுதிதான் நிலத்தை நோக்கியுள்ளது. ஒருமுறை அது நிலத்தைச் சுற்றி வர ஒரு மாத காலம் பிடிக்கிறது. இரு கிழமைக்காலம் நிலாவில் பகலாகவும், இருகிழமைக் காலம் இரவாகவும் இருக்கும்.

நிலவின் சராசரி அடர்த்தி 3. 34 சீரெடை (கிராம்). பகல் நேரத்தில் அதன் பரப்பில் காணும் வெப்பநிலை, 130 பாகை நூற்றளவை (சென்டிகிரேட்). இரவிலோ (நிலாவில்) சுண்ணத் திற்குக்கீழ் 150 பாகை நூற்றளவுக்குத் தாழ்ந்து விடுகிறது.

நிலாவைச் சுற்றிய வளிமண்டலம் ஏதும் இல்லாததால், பல விண் வீழ் கொள்ளிகள் அதில் வீழ்ந்து, நிலாவின் பரப்பையே மேடு பள்ளங்கள் நிறைந்ததாக ஆக்கியுள்ளன. வளிமண்டலமோ, நீரோ அங்கு இல்லாததால் நம் நிலத்தைப் போன்று அங்கு நில அரிப்புகள் ஏற்படுவதில்லை. எனவே பல இலக்கம் ஆண்டுகளாக, அதன் நிலப் பரப்பின் அமைப்பு மாருமலுள்ளது. விண்ணிலிருந்து அதன் பரப்பில் விழும் விண்கொள்ளிகளின் மோதலால் மட்டுமே நிலாவின் பரப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

நிலாவின் மேடு பள்ளங்கள் நிறைந்த மேற்பரப்பிற்கு விண்வீழ் கொள்ளிகள் மட்டுமே கரணியமன்று என்று சோவியத்து வானிய லாளரான என். கோசிரேவ் 1958-இல் கண்டுபிடித்தார். நிலாவின் உட்புறப் பகுதியிலிருந்து பீரிட்டு வெளியேறும் வளி(வாயுக்) களினாலும் கூட அதன் பரப்பு சில சமயங்களில் மாற்றமடைகிறது.

நிலத்திலிருந்து கொண்டே பல்வேறு கருவிகளைக் கொண்டு, நாம் நிலாவை ஆராய்ந்து கண்ட பல முடிவுகளை, விண்வெளி ஆய்வு வளப்படுத்தியுள்ளது நிலாவின் மறுபுறம் பற்றி, நிலத்தி லுள்ள ஆய்வாளர்களுக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை. நிலாவைச் சுற்றிச் செலுத்தப்பட்ட விண்கலன்கள், அதன் மறுபுறத்தையும் படம் எடுத்து அனுப்பியுள்ளன. இதைக் கொண்டு, அதன் முழு கோளப் பரப்பின் நிலப்படத்தையும் அறிவியலார்கள் வரைந்

துள்ளனர். அதில் பல மலைகள் உள்ளன. அவை ஏழு அல்லது எட்டு அயிரமாத்திரி (கிலோமீட்டர்) உயரத்திற்கும், அதற்கு மேலாகவும் உள்ளன. ஆயிரம் அயிரமாத்திரிகள் (கிலோமீட்டர்கள்) நீளமுள்ள, பல வெடிப்புகளும் மடிப்புகளும் பள்ளத்தாக்குகளும் உள்ளன.

நிலாவின் புற அடுக்கு, வெப்ப அரிதில் கடத்தியாகும். எனவே அதில் நுண்துளைகள் பல இருக்க வேண்டுமென்று கருதப்படுகிறது. அதன் பரப்பிலுள்ள பாறைகள் உயிர்வளி **(Oxygen),** மணலம் **(Silicon),** அலமியம், வெளிமம் **(Magnesium)** போன்ற மூலப் பொருள்களால் ஆனவை. பூமியிலுள்ள எரிமலைப் பாறைகளை ('பேசால்ட்') ஒத்தவை அவை. சாம்பல் நிறமாயுள்ள அந்தப்பாறை, பல்வேறு ஒளிக்கற்றைகளில் நிறம் மாறுகிறது. நிலாப் பாறைகளின் அகவை **340-365** கோடி ஆண்டுகளாகும். கதிர்வீச்சு அதிகம் இருப்பதாலும், வெப்பநிலை பெருமளவு மாறுபடுவதாலும், அங்கு உயிரினங்கள் ஏதுமில்லை. அங்குள்ளதைப் போன்ற மண்ணில், நிறத்தில் நிலைத்திணைகள் செழித்து வளர்கின்றன என்ற போதும், நிலாவில் அவை கிடையா.

நிலாவை ஆராய்வதற்காக விண்வெளியில் செலுத்தப்படும் கலன்களைச் சுமந்து செல்லும் ஏவுகணைகள், நிலாவின் பரப்பில் வீழ்வதனுல், அதில் நடுக்க அதிர்வுகள் ஏற்படுகின்றன. அத்தகைய அதிர்வுகள் அதில் சிலமணி நேரத்திற்குங்கூட நீடிக்கின்றன.

நிலாவைப் பற்றிய விளத்தங்கள் எவ்வளவோ நமக்குத் தெரிந்துள்ள போதும், அஃது எவ்வாறு தோன்றிற்று, அதன் உட்புற அமைப்பு எப்படியிருக்கும், நிலத்திற்கும் அதற்கும் உள்ள உறவுகள் அல்லது பிணைப்புகள் எவை என்பன போன்ற புலனங்களை இன்னும் ஆய்வாளர்கள் கண்டு பிடிக்க முடியவில்லை.

மாந்தன் நிலாவைக் குறித்த ஆராய்ச்சிகளை இடையருது நடத்திக் கொண்டிருப்பதன் நோக்கம், அண்டவெளியின் பிற கோள்களை ஆராய்வதற்கு, நிலாவிலேயே ஓர் ஆய்வுக்கூடம் அமைக்க முடியுமா என்ற எண்ணம் அவனுக்கு இருப்பதால்தான். இது நடைமுறையில் இயலுமா என்பதற்குக் காலம் விடையளிக்கும்.

—**என். நோவிகோவ்**

## சொல்லுங்கள் பார்க்கலாம்.

நாம் வண்ணங்களின் பெயரைச் சொல்லும் பொழுது பார்க்கும் வண்ணம் கொஞ்சம் அழுத்தமாக இருந்தால் அவ்வண்ணப் பெயருடன் வேறொரு மரபுச் சொல்லையும் இணைத்துச் சொல்கிறோம். எடுத்துக்காட்டாக நல்ல வெள்ளையாக இருந்தால் '**வெள்ளை வெளேர்** என்றிருக்கிறது' என்கிறோம். அது போல் கீழ்க்காணும் வண்ணங்களுக்கு என்ன சொல்கிறோம்.

கருப்பு, பச்சை, நீலம், மஞ்சள், சிவப்பு.

(தெரியா விட்டால் 7-ஆம் பக்கம் பார்க்க)

# “அன்பும் அறிவும்”

—சி. நா. செந்தமிழ்ச்செல்வன்.

அறிவைப் பகலவனுக்கும் அன்பை நிலவுக்கும் ஒப்பிடலாம். அன்பு உயிருடன் தோன்றி வளர்வது; அறிவு சூழ்நிலையின் மூலம் வளர்வது. பண்பு இவ்விரண்டின் மாட்சிமை மிக்க உருவாக்கம்.

அறிவியல் அறிஞனும், மொழிஇயல் அறிஞனும், வரலாற்றறிஞனும் மற்ற துறைகளின் அறிஞர்களும் அறிவின் ஒரு பகுதியை அறிந்தவர்களே ஆவர். ஒட்டு மொத்தமாக எல்லாத் துறைகளின் அறிவையும் தன்னகத்தே கொண்ட அறிஞர் என்று ஒருவரை இவ்வுலகு கொள்ள வேண்டுமாயின் அவர் திருவள்ளுவராகத் தான் இருக்க முடியும்; நூலும் திருக்குறள் தான்!

அறிவைப் பெற மூன்று வழிகள் உண்டு; ஒன்று நூல் வழியே கற்றல் மூலம் பெறல்; இரண்டு செவி வழியே ஆன்றோர் கூற கேட்டுப் பெறல்; மூன்று தன் பட்டறிவின் மூலம் பெறல்.

பண்டைக் காலத்தில் செவி வழியே அறிவு மிகுதியாக பெறப்பட்டது; சுவடிகளின் மூலம் அதற்கு அடுத்து மிகுதியாக அறிவு பெறப்பட்டது; பட்டறிவின் மூலம் பண்டை மாந்தன் நிறையக் கற்றான்.

பட்டறிவின் மூலம் பெறும் அறிவுதான் நாம் இறக்கும் வரையில் நெஞ்சில் நீங்காமல் நிற்பது; இரண்டாவதாக நீண்ட நாள் நின்று பயன் தருவது ஆன்றோர் மூலம் கேட்டுப் பெற்ற அறிவு; நூல் வழியே பெறும் அறிவு நாளுக்கு நாள் மறந்து போகும் தன்மையுடைத்து; எனவே அதனை மீண்டும் மீண்டும் நினைவு படுத்த வேண்டியுள்ளது.

அழுக்காறுள்ள நெஞ்சம் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதன்று. அடிமை உணர்வு அறிவு வளர்ச்சிக்குப் பகைவன். ‘விடுதலை’ உணர்வு கொண்டவனிடத்தில்தான் அறிவு வளரும். மன ஒருமைப்பாடு அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அறிவு வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட அகவையோடு நின்று விடுவதன்று; வேண்டுமானால் அறிவு வளர்ச்சியின் விரைவு அகவைக்கு அகவை வேறுபடும் என்று கூறலாம்; வாணாள் முழுதும் அறிவு வளர்ந்து கொண்டே வரும்.

ஒருவனிடத்தில் நல்லொழுக்கம் எந்த அளவிற்கு மிகுந்துள்ளதோ அந்த அளவிற்கு அறிவு அவனிடம் முதிர்ந்து காணப்படும். எனவே நல்லொழுக்கம் அறிவின் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் இன்றியமையாததாகிறது.

உண்மையான அறிவுடையோரின் உள்ளம் அப்பழுக்கற்றதாகவே இருக்கும். வீண் பேச்சை அறிவு விரும்பாது. அறிவுத் துடிப்புள்ள மனம் வீண் பொழுது போக்கலில் ஈடுபடாது. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறன் அத்தகைய மாந்தர்களுக்கு இயல்பாகவே இருக்கும்.

அறிவு காரணியத்தின் அடிப்படையில்தான் இயங்கும்; அன்பு அப்படியல்ல; அன்பிற்கு காரணியம் காட்டத் தெரியாது; அத்துடன் அதனால் முடியாது. மாந்தனுள் அன்பின் ஆட்சி நடக்கும் போது அறிவு செயலற்றிருக்கிறது; மாந்தனுள் அறிவின் ஆட்சி நடக்கையில் அன்பு பணிந்து விடுகிறது. இவ்விரு வாழ்வியற் கூறுகளும் இணைகரமாக எப்போது ஆகிறதோ அப்போதுதான் மாந்தன் 'சமநிலை' எய்துகிறான்.

குறிப்பு: அறிவு வளர்ச்சி சில நோய்களாலும் உடற்கோளாறுகளாலும் தடைப்படலாம். அதற்கு தக்க மருத்துவம் செய்வதே தக்கவழி.

---

# மலைவாழ் மக்களின் பெயர்கள்

| | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| 1. | தம்பிரான் | தம்பிராட்டி |
| 2. | தொண்டன் | தொண்டி |
| 3. | செம்பன் | செம்பி |
| 4. | காளன் | காளி |
| 5. | ஆத்தன் | ஆத்தா |
| 6. | வீரன் | வீரி |
| 7. | சாடன் | சாடி |

முதலில் குறிப்பிட்டுள்ள ஆண்பால் பெண்பால் பெயர் நீலமலையில் வாழும் குறும்பர்களிடம் உள்ளது. இதில் தம்பிரான் என்னும் ஆண்பாற் பெயர் தமிழகத்தில் வழங்குவதே. ஆயின் தம்பிராட்டி என்னும் பெண்பாற் பெயர் நீலமலைக் குறும்பர்களிடம் மட்டுமே வழக்கில் உள்ளது.

இரண்டாம் மூன்றும் பெயர்கள் நீலமலைப் பனியர்களிடம் வழங்குபவை. இவற்றில் தொண்டன் என்பதற்கு நேரான தொண்டி என்றும் பெண்பாற் பெயர் நோக்கத்தக்கது.

நான்கு முதல் ஏழு வரையுள்ள பெயர்கள் கோவைப் பகுதியில் வாழும் இருளர் என்னும் இனத்தவரிடையே உள்ளவை. இவற்றில் காளிக்கும் ஆத்தாவுக்கும் நேரான 'காளன்' 'ஆத்தன்' என்னும் ஆண்பாற் பெயரும்; வீரனுக்கு நேரான 'வீரி' என்னும் பெண்பாற் பெயரும்; 'சாடுதல்' என்னும் வினைச் சொல்லின் அடியாகப் பிறந்த 'சாடன்—சாடி' என்னும் இருபாற் பெயரும் கவனிக்கத் தக்கவை.

— தொகுப்பு. புலவர். **பொன். முகிலன்.** கூவலூர்.

---

## சொல்லுங்கள் பார்க்கலாம்—விடை.

கன்னங் கரேல், பச்சைப் பசேல், நீல நிரேல், மஞ்சள் மசேல், செக்கச் செவேல்.

## பண்பொடு வாழ்க!

—மா. கதிரொளி.

விழியெனக் கல்வியைக் கற்றிடு வாய்;நீ
விரைந்தே வளர்ந்திடுவாய்!—தமிழ்
மொழியினைப் போலோர் மொழியுள தோ;நீ
முனைந்தே பயின்றிடுவாய்!

கண்ணெனும் கல்விக் கடலினி லே;நற்
கருத்தை மனங்கொள்வாய்!—பின்
எண்ணிய யாவும் இயற்றிடு வாய்;உல(கு)
ஏத்திட வாழ்ந்திடுவாய்!

ஊரும் உலகமும் ஓங்கி வளர்ந்திட
ஒருதுணை யாகிடுவாய்!—தனிப்
பேரும் புகழுமே பெற்றிடு வாய்;உளப்
பீடுற வாழ்ந்திடுவாய்!

தன்னலம் என்றும் தவிர்த்திடு வாய்;அது
தாழ்வெனத் தள்ளிடுவாய்!—நீ
உன்நலத் தோடிவ் வுலகினைப் பேணிடில்
உண்மை உயர்வடைவாய்!


நாடி நலம்பல பெற்றிடி னும்,உயர்
நன்றுசெய் தே,வாழ்வாய்!—இசைப்
பாடிப் பறந்திடு புள்ளினம் போலவே
பண்புட னே வாழ்வாய்!

---

## நாம் விரும்பாமல் தானே நமக்கமைந்த உடல்!

—நமது மாந்த உடம்பில் 600 தசை நார்கள், 1000 கல் நீளமுள்ள அரத்தக் குழாய்கள், 550 அரத்த நாளங்கள், 16 சதுர அடிப் பரப்புடைய தோல்,
—15 இலக்கம் வெயர்வைக் கோளங்கள்,
—மூச்சுப் பையில் தேன்கூடு போன்ற 70 கோடி கண்ணறைகள்,
—30 இலக்கம் கோடி நரம்புக் கண்ணறைகள், 300 இலக்கம் வெள்ளையணுக்கள்,
—18 கோடி கோடி சிவப்பணுக்கள்,
—$2\frac{1}{2}$ இலக்கம் தலைமயிர்கள் உள்ளன.
—நெஞ்சு 70 ஆண்டுகளில் 250 கோடி தடவைகள் துடிக்கின்றது.
—நாள் தோறும் 36 விரலம் (அவுன்சு) உமிழ்நீர் சுரந்து விழுங்கப் பெறுகின்றது.
—120 முதல் 240 விரலம் (அவுன்சு) வரை வயிற்றில் செரிநீர் ஊறி உணவைச் செரிப்பிப்பதுடன் நச்சுயிரிகளையும் கொல்லுகின்றது.

—உலூயிசு இலீகன்.



# கழுதை அழுத கதை

துரை. மாணிக்கம்

**முன்கதைச் சுருக்கம்:**

(ஆண் துணையிழந்த பெண் கழுதை ஒன்று தன் பெண் குட்டியிடம் தனக்கு நேர்ந்த துயரையெல்லாம் சொல்லி வருந்தியழுதது. பிறகு இரண்டும் தங்களுக்குத் துணையாக வந்த ஒரு காளை மாட்டுடன் சேர்ந்து கொண்டு, துன்பமும் மக்களின் தொல்லையும் மிகுந்த நாட்டை விட்டுவிட்டுக் காட்டுக்கு ஓடிப்போய் விடுவதென முடிவு கட்டிப் புறப்பட்டன. மாலை முழுதும் நடந்து இருட்டுகின்ற நேரத்தில் மூன்றும் ஒரு காட்டை அடைந்தன. அங்கிருந்த பாழ் மண்டபம் ஒன்றில் திருடர்கள் விட்டுச் சென்ற உணவுப் பொருள்களை உண்டு அன்றிரவு நன்றாய் உறங்கின.

மறுநாள் விடியலில் கழுதை எழுந்தபோது குட்டியைக் காணாமல் வருந்தியது. பிறகு காளையும் கழுதையும் சேர்ந்து பல இடங்களில் தேடியும் குட்டி கிடைக்காமற் போகவே, கழுதை தன் நிலைக்குப் பெரிதும் வருந்தி, மனமுடைந்து, தற்கொலை செய்து கொள்வதற்காக ஓர் ஓடையில் குதித்தது. ஆனால் ஓடையில் தண்ணீர் மிகவும் குறைவாக இருந்ததால் அது நீரில் மூழ்கி இறந்து போகாமல் வருந்திக் கரையேறியது.

தன்னை உடன் அழைத்துக் கொண்டு வந்து இடையில் தான் மட்டும் இறக்க விரும்புவது பிழையென்று காளை கழுதைக்குக் கூறி, அதைத் தேற்றி உலகில் துன்பமும் இன்பமும் கலந்தே இருப்பதையும் அதனால் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் உணர்த்தி, அதை மேலும் அழைத்துக் கொண்டு காட்டின் உட்பகுதிக்குச் சென்றது.

இவ்வாறு போய்க் கொண்டிருக்கையில் இரண்டும் களைப்படையவே, ஓரிடத்தில் தங்கி ஓய்வெடுத்துக்கொள்ள விரும்பி அமரத் தொடங்கின. அப்பொழுது காடே அதிரும்படியாகவும், காது செவிடாகும் படியாகவும் எங்கிருந்தோ ஒரு வேட்டொலி கேட்டது. அதைக் கேட்ட இரண்டும் அஞ்சியெழுந்து நடுங்கிக் கொண்டு

நிற்கையில் இடிமுழக்கம் போல் ஓர் அரிமா (சிங்கம்) வீறிட்டு அலறும் ஒலி கேட்டது. இதைக் கேட்டுக் காளையும் கழுதையும் மிகவும் அஞ்சி, திசைக்கு ஒன்றாக ஓடிப் பிரிந்தன. நெடுந்தொலைவு ஓடியபின் கழுதை தன்னந்தனியாக இருப்பதற்கு வருந்தி, காளையையும் குட்டியையும் தேடிக் கொண்டு காட்டின் உட்புறத்தை நோக்கி மெதுவாய் நடந்து சென்றது. மாலை வரை தொடர்ந்து நடந்ததால் கழுதை மிகவும் களைப்படைந்தது. அதன்பின் இருள் சூழவே, கழுதை மிகுந்த மனச்சோர்வும் உடல் சோர்வும் கொண்டு தள்ளாடி ஓர் இடத்தில் நின்று, படுப்பதற்காகச் சுற்றும் முற்றும் பார்க்கையில், அது நின்றவிடத்திற்கு மிக அருகில், நெருப்புப் போன்ற இரண்டு விழிகள் தென்பட்டதைக் கண்டது. கண்டதும் உள்ளம் பதறி, 'ஓ, நமக்குத் தீங்கு வந்து விட்டது' என்று உணர்ந்து ஓட்டம் எடுக்கத் தொடங்குகையில், 'நில்' என்று ஒரு சொல் நிலம் அதிரும்படி கேட்டது.

அச்சொல்லைக் கேட்ட பெண் கழுதை உடல் சில்லிட்டுப் போய், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றது. அப்பொழுது ஓர் அரிமா வயிற்றால் நகர்ந்து கொண்டு அதன் அருகில் வந்து, தன் காலில் இருக்குக் புண் ஒன்றைக் காட்டியது. அது துயரத்தால் வருந்துவதை இரக்கமுடன் கண்ட கழுதை, தான் என்ன உதவி செய்ய வேண்டும், என அன்புடன் கேட்டது. அரிமா தன்னை ஒருவன் வேட்டெஃகத்தால் சுட்டதையும், தான் அவனுக்குத் தப்பி விட்டதையும், காலில் மட்டும் அடிப்பட்டுத் துயரங் கொண்டதையும் கூறி வருந்தியது. உடனே பெண் கழுதை அண்டையில் இருந்த கள்ளியை ஒடித்து வந்து, அதன் பாலை அரிமாவின் காற்புண்ணில் ஒழுக விட்டது. அன்று இரவு இரண்டும் ஓய்வெடுத்துக் கொண்டன. மறுநாள் காலை அரிமாவைக் கழுதை தன் முதுகின் மேல் தூக்கிக் கொண்டு நடந்து நெடுந்தொலைவு, அரிமா குடியிருந்த கற்புழைக்கு வந்து சேர்ந்தது.

அதன் அன்புக்கு அரிமா நன்றி கூறி, அக்காட்டில் உள்ள விலங்குகளையெல்லாம் அழைத்து, கழுதையின் அறிவையும் அன்பையும் ஆற்றலையும் அவற்றிற்குக் கூறிப் பாராட்டி, அதைத் தன் அமைச்சராக ஏற்றுக் கொண்டதை விலங்குகளுக்கு அறிவித்து, அதற்கு இனி எவரும் தீங்கு செய்யக்கூடாது எனக் கட்டளையிட்டது. கழுதை நன்றிப் பெருக்கால் கண்ணீர் விட்டு நின்றிருக்க அவ் விலங்கரசன் அதை அழைத்து, விலங்குகள் எப்படி நன்கு வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது பற்றி அறிவுறுத்தும்படி கேட்டுக் கொண்டது.

அரிமாவின் வேண்டுகோளுக்கு இணங்கி, கழுதை தன் வாழ்க்கைத் துயரத்தையும், தான் மாந்தர்பால் வாழ்ந்திருந்த வகையினையும் கூறி, அம் மாந்தர் எனப்படுவோர் எப்படி விலங்கைவிடத்

தாழ்ந்த மனத்தினராய் வாழ்க்கை நடத்துகின்றனர் என்பதை எடுத்துரைத்தது. அப்பொழுது அங்கொரு குள்ளநரி வந்து, அரிமாவிடத்தில், அக் காட்டிற்கு ஒரு காளைமாடு புதிதாக வந்திருப்பதையும் அது யார் என்று கேட்டதற்கு அது தன் முகத்தில் உதைத்து விட்டதையும் கூறி, அது இக்காடு தனக்கே சொந்தம் என்று கூறியதையும் சொன்னது. அதைக் கேட்டு அரிமா வெகுண்டு, அந்த நரியின் பின்னுல் ஓர் ஆண் யானையை அனுப்பி அக்காளை மாட்டைக் கட்டியிழுத்து வரக் கட்டளையிட்டது. அதுகேட்டுக் கழுதை, அக் காளை மாடு தன் தோழனுகத்தான் இருக்க வேண்டுமென்று கருதி, அதற்கு ஏதும் துன்பம் இழைக்காமல் அழைத்து வரச் சொல்லுங்கள் என்று அரிமாவிடம் வேண்டிக் கொண்டது. அரிமாவும் அப்படியே யானையிடம் கூறியது.

நரியும் யானையும் சென்றவுடன் கழுதை அரிமாவிடம் பக்குவமாகத் தன் கதையை எடுத்துச் சொல்லித் தன் குட்டிக்காகவும் காளை மாட்டுக்காகவும் தான் வருந்துவதாய்க் கூறியது. சிறிது நேரம் சென்றவுடன் இரண்டு களிறுகள் அக் காளை மாட்டையும் கழுதையின் காணுமற் போன பெண் குட்டியையும் அழைத்துக் கொண்டு வந்தன. தன் குட்டியையும் காளையையும் பார்த்தவுடன் கழுதை மிக மகிழ்ச்சி அடைந்தது. அவை மூன்றும் ஒன்று சேர்ந்தது கண்ட அரிமாவும் மிகவும் மகிழ்ந்தது. அதன் பின் அந்த மூன்றையும் விட்டு, விலங்கரசன் மீதியை நாளைக்குப் பேசுவோம் எனக் கூறிச் சென்றது. பின்னர் காளை, கழுதையைப் பிரிந்த பின் நடந்த கதையைக் கூறியது.

மறு நாள் காலை, அரிமா அனைத்து விலங்குகளையும் கூட்டி, இனிமேல் அவ் விலங்குகளெல்லாம் எப்படியெப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று விளக்கியது. தாமாகச் சாகும் விலங்குகள், தீய மாந்தர்கள் தவிர உயிருடன் உள்ள விலங்குகள் இவற்றை இனிமேல் தின்னக்கூடாது என்று விலங்குகளுக்குக் கட்டளையிட்டது. அனைத்து விலங்குகளும் அதன் கூற்றை ஒப்பின.)

ஆங்கரிமா கூற
அமைச்சுக் கழுதையும்
'ஈங்கினிமேல் எம்மரசர்
கூறியதை எவ்விலங்கும் —1570
உள்ளத்தில் ஆழவைத்தே
உண்மையாய்ச் செய்திடுக.
கள்ளத்தால் வேருய்
நடப்பவரைக் கண்டேமால்

தண்டனையோ மிகக்கடுமை
யாயிருக்கும்; தப்பாதீர்!
பண்டைப் பிழையின்றிப்
பார்த்துக்கொள் ளுங்களினி''

என்றே உரைசாற்றி
எல்லா விலங்கினையும்
'ஒன்றே விலங்கினம்'என்
றுரத்துரைக்கக் கூறியது.

கூறியதும் ஆங்கதுபோல்
கூட்ட விலங்குகளும்
ஏறிய,ஓ ரேகுரலில்
ஏற்றொலித்துக் காட்டியவாம்!
அப்பொழுது பெண்கழுதை
அன்போ டிவைஉரைக்கும்:

"இப்படியே என்றைக்கும்
ஏற்றமுடன் நாமிருந்தால்
மக்களெனும் மேலினத்தின்
மாண்புமிகு பேரினமாய்
ஒக்கநாம் வாழ்ந்திடலாம்;
ஒண்புகழும் எய்திடலாம்!
இன்னும் பலநலன்கள்
இங்கெடுத்துக் கூறுகின்றேன்;
மன்னுமென் நல்லுரையின்
மாட்சியைப்பின் பற்றுங்கள்.

நாமோ விலங்கினங்கள்!
நாமெல்லாம் ஓர்குலமே!
தீமைக் குலப்பிரிவைத்
தீய்த்திடுவீர்! இன்றுமுதல்
எல்லாரும் ஓர்குலமே!
எல்லாரும் ஓரினமே!
பொல்லாத மாந்தரினைப்
போலிருக்கக் கூடாது!

நம்மிடையில் மெல்விலங்கை
நாம்வருத்தல் குற்றமாம்!
தம்முழைப்பால் ஒவ்வொன்றும்
தாமுண்ணல் வேண்டுமினி!
மான்கள், முயலினங்கள்
மற்றுமுள்ள ஆட்டினங்கள்,
கான்பறவைக் கூட்டம்,
குரங்கு,பன்றி, வெள்ளெலிகள்—
என்றிந்த மெல்லுயிரை
எந்த விலங்கேனும்
கொன்றுண்ணக் கூடாது.
கொல்லல் கொடுங்குற்றம்!
புல்லுண்டு வாழுகின்ற
புன்மை விலங்குகள்மேல்
எல்லா விலங்கும்
இரக்கங்காட் டல்வேண்டும்!

நம்மின் அரசரிங்கு
நாட்டியது போலினிமேல்
தம்மில்தாம் சாகும்
விலங்குகளைத் தாமுணலாம்!
அன்பு விலங்குகளே!
அன்போடு வாழுங்கள்!
இன்பமெனும் வாழ்க்கைக்
கிதுவே வழியாகும்!

இன்னுமோர் உண்மையினை
யான்சொல்ல வேண்டுமினி!
என்னைப் பொறுத்ததிதாம்!
என்முடிவைப் பற்றியதாம்!

—(தொடரும்)

(**ஆசிரியர் குறிப்பு:** ஓய்வின்மையாலும், பல்வகையான இடையீட்டு வினைகளாலும் இத்தொடர் நீண்ட இடைவெளிக்குப்பின் இக்கால் தொடர்கிறது. இனி இடையறுது தொடரும். அன்பர்கள் பொறுத்துக் கொள்க. தொடர் 33-இலிருந்து வரியெண் பிழையாக எண்ணப் பெற்றுள்ளது. அப்பிழை இத்தொடரில் களையப் பெற்றது.)

# உலகில் மிக மலிவான போக்குவரத்துத் துறை!

மாசுகோவில் போக்குவரத்துக் கட்டணம் மிகக் குறைவு.

மாசுகோவில் எங்குச் செல்ல வேண்டும் என்றாலும் பேருந்துக் கட்டணம் 5 கோபெக்தான். (50 காசுதான்); இழு-உந்துக்கு (Trawly-Bus) 40 காசு கட்டணம்; பாதாளத் தொடர் வண்டியில் எங்கு வேண்டுமானாலும் செல்ல, 50 காசு கட்டணம்.

எடுத்துக்காட்டாக, 8-ஆம் எண் உந்தில் இலெனின் பழம் பொருட்காட்சியகத்திலிருந்து தெற்குக் கடற்கரைக்குச் செல்வதற்கு (11 கல் போவதற்கு), 50 காசுதான் கட்டணம். இதே கட்டணத்திற்குப் பாதாளத் தொடர்வண்டிப் பாதையில் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்குச் செல்லலாம்.

நகரத்தின் நடுவத்தை வட்டமிடும் "2-ஆந்தர இழு-உந்தில் 40 காசுக்கு நமது தலை சுற்றும் அளவுக்கு நெடுந்தொலைவு போகலாம். 38-ஆம் எண் மின்னுந்தில் (டிராமில்) ஏறினால், 30 காசுக்கு (83 நிமையங்கள்) 13 கல் போகலாம்.

ஒரே மாதிரியான கட்டணம் வைக்கப்பட்டதால், மின்னுந்து (டிராம்,) இழு-உந்து ஆகியவற்றில், நடத்துனர் இல்லை; ஓட்டுநர் ஒருவர் மட்டுந்தாம் உண்டு. இந்த வழக்கம் 1962-இல் தொடங்கப் பெற்றது; இதன் கரணியமாக வேலையிழந்த 20,000 நடத்துநர்களுக்கு வேறு வேலைகள் தரப்பெற்றன. அவர்களில் பலர் ஓட்டுநர்களாக இருக்கின்றனர்.

நடத்துநர்கள் இல்லாததால், ஓட்டுநருக்கு வேலை அதிகமா? இல்லை. வழிப்போக்கர்களே ஒரு பெட்டியில் காசைப் போட்டு விட்டு, தங்கள் சீட்டை எடுத்துக் கொள்கின்றனர். ஒவ்வொரு மின்னுந்திலும், பேருந்திலும் இழுவுந்திலும் கட்டணத்தைச் செலுத்திச் சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நான்கு பெட்டிகள் உள்ளன. பெட்டியிலுள்ள தொளையின் வழியாகக் காசைச் செலுத்தி, ஒரு நெம்பை (Lever) இழுத்தால் சீட்டு கிடைக்கும்.

ஏந்துகளைக் கருதி, 10 சீட்டுகள் கொண்ட சிறு பொத்தகங்களைப் போக்கர்கள் வாங்குகின்றனர். சிவப்புச் சீட்டு பேருந்துகளுக்கு. நீலச்சீட்டு இழுவண்டிகளுக்கு. வெள்ளைச்சீட்டு, மின்னுந்துகளுக்கு. இந்தச் சீட்டுகளைப் பணத்திற்குப் பகரமாகப், பெட்டியிலுள்ள தொளையில் போட்டு, உரிய உந்துச் சீட்டைப் பெறலாம்.

இந்தச் சீட்டுப் பொத்தகங்கள் மாசுகோ நகரெங்கும் கடைகளில் கிடைக்கின்றன. அவற்றை ஓட்டுநரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்; ஆனால், வண்டி நிற்கும் பொழுதுதான் அவர் சீட்டுகளை விற்பனை செய்வார்.

# நல்ல நண்பன்

ஒரு தோட்டத்தின் மூலை ஒன்றில் பட்டாணி முளை விட்டிருந்தது. அதனுடன் மற்ற பூச்செடிகளும் வளர்ந்திருந்தன. பட்டாணி முளையிலிருந்து குட்டிச் செடி இலை விட்டு வளரத் தொடங்கியது. அந்தக் குட்டிச் செடி வானத்தை அண்ணாந்து பார்த்தது. "ஆகா; எவ்வளவு அழகான சூரியன்; வெதுவெதுப்பான இந்தச் சூரியன் உலகில் எத்தனை நிலைத்திணைகளை வாழ வைக்கிறான்" என்று வியப்படைந்தது பட்டாணிச் செடி.

பட்டாணிச் செடி தன்னைச் சுற்றிப் பார்த்துக் கொண்டது. "ஆகா, என்ன வியப்பான உலகம் இது;" என்று கூறியது. அருகில் வளர்ந்திருந்த செடிகளைப் பார்த்து, தானும் வளர்ந்து பூத்துக்குலுங்க மாட்டோமா என்று ஏங்கியது.

பட்டாணிச் செடிக்கு அருகில் ஆழமாக வேர்களை ஊன்றிக் கொண்டு இருந்த கோரைப்புல் ஒருநாள் பட்டாணிச் செடியைப் பார்த்து ஏளனம் செய்து நகைத்தது.

"ஏய், பட்டாணி; நீ என்ன எங்களைப் போல் வளர்ந்து, பூத்துக் குலுங்கப் போவதாக எண்ணிக் கொண்டு இருக்கிறாயா? அது வீண் ஆசை. உன்னால் முடியாத வேலை. வேண்டுமானால் பார்" என்று சூள் விட்டது, கோரைப்புல். அடுத்த நாளில் இருந்து கோரைப்புல் வேகமாக வளரத் தொடங்கியது. பட்டாணிச் செடியை விட உயரமாக வளர்ந்தது. தன் புற்களை அடர்த்தியாக வளர விட்டது. பட்டாணிச் செடியின் மீது சூரியக் கதிர்கள் படாத வண்ணம் மறைத்துக் கொண்டது, ஐயோ! பட்டாணியால் சூரியனைக் கூட பார்க்க முடியவில்லை.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

சீட்டு ஆய்வாளர்கள் அவ்வப்போது ஆய்வு செய்கின்றனர். சீட்டு இல்லாதவர்களுக்கு அந்த இடத்திலேயே அவர்கள் ஒரு ரூபிள் தண்டம் இடுகின்றனர். ஆனால் சீட்டு ஆய்வாளர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். சீட்டு ஆய்வாளர்களின் வேலையைப் போக்கர்களே (பொது மக்களே) கவனிக்கின்றனர். எனவே, எவரும் இலவயமாகச் செலவு மேற்கொள்வதில்லை.

சலுகைக் கட்டணச் சீட்டு வைத்திருப்பவர்கள், தேவைப் பட்டால், உடன் போக்கர்களிடம் தங்கள் சான்றுச்சீட்டைக் காட்டுகின்றனர்.

முதல் மின்னுந்து காலை 5.30க்குப் புறப்படுகிறது; நகருந்துகளும் இழுவுந்துகளும் காலை 6 மணிக்குப் புறப்படுகின்றன; மறுநாள் காலை 1 மணி வரை ஓடுகின்றன. உலகிலேயே மிக மலிவான, மிகத் திறமையான போக்குவரத்துத் துறையை மாசுகோ மக்கள் பெற்றுள்ளனர். o

"பார்த்தாயா, பட்டாணிச் செடியே; இப்பொழுது சாகப்போவது உறுதி. இங்கு நீ இருந்ததைக் கூட யாரும் அறியப் போவது இல்லை. உன் வாழ்வு அவ்வளவு தான்" என்று கூறி நகைத்தது, கோரைப்புல்.

"அன்புள்ள கோரையே, நீ கூறுவது உண்மைதானா? நான் மறுபடியும் சூரியனைப் பார்க்க மாட்டேனா? நான் பூத்துக் குலுங்க முடியாதா?" என்று வருத்தத்துடன் கேட்டது, பட்டாணிச் செடி.

அப்பொழுது பட்டாணிச் செடியின் அருகிலிருந்து மிகவும் தெளிவான, அன்பான குரல் ஒன்று கேட்டது:

"கவலைப்படாதே, பட்டாணிச் செடியே; நீ பூக்கத்தான் போகிறாய். நான் உனக்கு உதவுகிறேன். என்னைக் கெட்டியாகப் பற்றிக்கொள். பிறகு பார்", என்று கூறியது, சூரியகாந்திச் செடி. சூரியகாந்திச் செடியும் இன்னும் முழுமையாக வளரவில்லை. இருந்தாலும் அது நிலத்தில் உறுதியாக வேரூன்றி நின்றது. அதன் தண்டு மிக வலுவாக இருந்தது. பட்டாணிச் செடி சூரியகாந்தி கூறியபடி செய்தது. சூரியகாந்திச் செடியை உறுதியாகப் பற்றிக் கொண்டது. நாளுக்கு நாள் சூரியகாந்தி உயரமாக வளரத் தொடங்கியது; அதோடு பட்டாணிச் செடியும் வளர்ந்து வந்தது.

ஒருநாள் சூரியகாந்திச் செடியிலிருந்து பெரிய ஓர் அழகான தங்க நிறப் பூ மலர்ந்தது. அவ்வளவு ஒளியாக, மிகப் பெரிய மஞ்சள் நிறமுள்ள மலரைக் கண்ட பட்டாணிச் செடி இதுதான் சூரியனோ என்று கூட நினைத்தது.

"ஓ! எவ்வளவு அழகாக நீ இருக்கிறாய்!" என்று மகிழ்ச்சியால் கத்திவிட்டது பட்டாணிச் செடி.

"ஆமாம்; நீ மட்டும் என்னவாம்?" என்றது சூரியகாந்தி. அப்பொழுது பட்டாணிச் செடியில் சிவப்பு நிறமான, பட்டுப்போன்ற, மணம் மிகுந்த பூக்கள் பூத்தன. அந்த மணத்தை நாடி நாலா பக்கங்களிலிருந்தும் தேனீக்களும், வண்ணத்துப்பூச்சிகளும் சூரிய காந்திச் செடியை நோக்கிப் பறந்தோடி வந்தன. சூரியகாந்திப் பூவுக்கு வாழ்த்துக் கூறின. திடமான நம்பிக்கையுடன் சூரியகாந்திச் செடியைப் பற்றிக் கொண்டு இப்பொழுது பூத்துக் குலுங்கும் பட்டாணிச் செடியின் அறிவைக் கண்டு வியந்தன; பாராட்டின. கோரைப்புல்லின் நிலை என்ன? பொறாமையால் மனம் புழுங்கிக் கொண்டு, பட்டாணிச் செடியின் அடியில் அது சோர்ந்து கிடந்தது.

"அன்பான நல்ல நண்பன் மட்டும் இருந்தால், வாழ்க்கை எவ்வளவு சுவையாக இருக்கின்றது, பார்த்தீர்களா?" என்று பட்டாணிச் செடி, தேனீக்களிடமும் வண்ணத்துப் பூச்சிகளுடமும் கூறிற்று.

—சித்திரா.

# பயன் மொழிகள்.

- தன்னுள்ளே இறைவனைக் காணாதவன் தனக்கு வெளியேயும் அவனைக் காணமாட்டான்.
- உலகத்தைப் பற்றிய எண்ணங்களும் கவலைகளும் உன் மனத்தை துன்புறுத்தும்படி செய்து கொள்ளாதே. செய்ய வேண்டிய செயலை அதனதன் காலத்தில் செய். —**இராமகிருட்டிணர்.**
- 'அறிவு' (மெய்யறிவு) அறியாமையால் மூடப்பட்டிருக்கின்றது. ஆதலால் உயிர்கள் மயக்கமடைகின்றன. —**கீதை.**
- எதிர்காலம் நிகழ்காலத்தில் அடங்கியுள்ளது, எப்படியெனில் விதையில் செடி அடங்கி இருப்பதைப் போன்று. —**செல்லி.**
- செல்வர்கள் மேலும் மேலும் செல்வர்களாகின்றனர்; ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகின்றனர். —**செல்லி.**
- நமக்கு ஒருசில கூடிவராதபோது நிலா மறைப்பு பகலவன் மறைப்பு ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைப்பது ஒரு விளையாட்டான உலகச் செயல். —(**எட்மண்ட்**) **"இலியர் அரசன்"**
- சிறிது கற்றிருத்தல் அச்சந் தரத்தக்கது!
- மாந்த வகையில் சரியான கல்வி மாந்தனே! —**அலெக்சாந்தர் போப்.**
- யான் எனது என்னும் இருவகைப் பற்றுகளையும் பற்றிக் கொண்டு விடாதவரை, துன்பங்களும் விடாமல் பற்றிக் கொள்கின்றன. —**திருவள்ளுவர்.**
- இறைவன் எல்லாவற்றையும் (All Things) நன்றாகவே செய்துள்ளான்; ஆனால் மாந்தன் அவற்றுள் தலையிட்டு அவற்றைத் தீயவாக்குகிறான். —**உரூசோ.**
- உலகெலாம் பரவிய பொருள் அழிவற்றதென்று அறிக. அழியாப் பொருளை அழிக்க யாருக்கும் இயலாது.
- பொருள்களை நினைப்பதால் பற்றுண்டாகிறது. பற்று ஆசையாக மலர்கிறது. ஆசை சினமாக வடிவெடுக்கிறது. சினத்தால் மனக் குழப்பம்; குழப்பத்தால் நினைவின்மை; நினைவழிவால் அறிவழிவு; அறிவழிவால் ஆள் அழிகிறான்.
- உயிர்கள் அத்தனைக்கும் எஃது இரவோ அதில் மெய்யறிஞன் விழித்திருக்கிறான். உயிர்கள் எல்லாம் துய்த்துணரும் நிலை மெய்யறிஞர்க்கு இரவு.
- யாரும் ஒரு நொடியேனும் செயலாற்றாதிருப்பதில்லை. ஏனென்றால் இயற்கையினின்று தோன்றிய குணங்களால் ஒவ்வோர் உயிரும் தன்வயமின்றிக் கருமம் செய்விக்கப் படுகிறது. —**கீதை.**
- பிறருடைய தீய குணங்களைப் பற்றிப் பேசுவதில் காலத்தைச் செலவிடுவோன் தன் காலத்தை வீணிலே கழிப்பவன் ஆகிறான். —**இராமகிருட்டிணர்.**
- உலகப் பற்று அதிகமுள்ள மாந்தனுக்கு மெய்யறிவு தோன்றாது. எவ்வளவுக்கு உலகப்பற்று குறைந்து இருக்கிறதோ அதற்கேற்றபடி மெய்யறிவு வளரத் தொடங்குகிறது. —**இராமகிருட்டிணர்.**

தொகுப்பு: **சி. நா. செந்தமிழ்ச்செல்வன்.**

# சொற்கள் சொல்லும் கதைகள்!

**To know a word is to know a truth.**

பன்மொழிப்புலவர்: இரா. மதிவாணன். க.மு.

## 37. விழுது

ஆலமரத்தின் விழுதுகளுக்கு அப்பெயர் ஏன் ஏற்பட்டது என்று அறிவது சுவையானதாகும். ஆலமரத்தின் விழுதுகள் தாமாகவே கிளைகளிலிருந்து தரையை நோக்கி விழுகின்றன. மேலிருந்து கீழே விழுவதால் விழுது என்று பெயர் பெற்றது. விழுவது—விழுது.

## 38. சீமை யெண்ணெய்

மண்ணெயைச் சிலர் சீமை யெண்ணெய் என்பர். வெளி நாட்டுக்குப் போய் வந்தவனைச் சீமைக்குப் போய் வந்தவன் என்கிறார்கள்.

சீமை என்பது சேய்மை என்பதன் திரிந்த வடிவமாகும். சேய்மை—தொலைவு. தொலைவான நாடுகள் சேய்மைகள் அல்லது சீமை எனப்பட்டன. சேய்மையிலிருந்து வந்த எண்ணெய் சேய்மை யெண்ணெய் என அழைக்கப்பட்டு பிற்காலத்தில் சீமை யெண்ணெய் என மருவி வழங்கலாயிற்று.

## 39. அந்தப்புரம்

அரண்மனையில் அரசனின் உரிமை மகளிர் தங்கியிருக்கும் இடம் அந்தப்புரம் எனப்பட்டது. இச் சொல் தெலுங்கில் அன்திபுரம் என வழங்குகிறது. அன்திபுரம் என்றால் மேல் மாடி என்று பொருள். அரண்மனை மேல்மாடிகளில் அரசியும் பிற உரிமைகளிரும் தங்கி யிருந்ததால் அப்பெயர் வழங்கி வந்தது.

தமிழில் அண், அண்ணம் என்றால் மேலே, மேற்பகுதி என்று பொருள். அண்ணத்துப்புரம் - அண்திபுரம் அந்தப்புரம் என இச்சொல் திரிந்து வடமொழியிலும் புகுந்து விட்டது.

---

## மிகச் சிறிய நாடு தனி அரசு கேட்கிறது!

ஆத்திரேலியக் கடற்கரையிலிருந்து 8 அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) தொலைவில், காந்தத் தீவு உள்ளது. இதன் மக்கட் தொகை, 1800 பேர்! இவர்கள் ஆத்திரேலியாவில் இருந்து பிரிந்து தனி அரசு நிறுவ விரும்புகின்றனர். தம் தேவைகளை ஆத்திரேலிய அரசு புறக் கணிக்கிறது என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தம்முடைய சொந்தச் சட்டங்களை வெளிப்பாடு செய்யவும், சொந்த நாணயத் தையும், அஞ்சல் தலைகளையும் வெளியிடவும், வரிகளை அகற்றவும், அவர்கள் திட்டமிடுகின்றனர். இந்தச் சிறிய தீவுக்கு நிரம்ப வருவாய் வரும் என்று அவர்கள் கருதுகின்றனர். 19 அயிரமாத்திரி (கிலோ மீட்டர் ($12\frac{1}{2}$ கல்) நீளமும் 5 அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) ($2\frac{1}{4}$ கல்) அகலமும் கொண்ட இந்தத் தீவுக்கு, ஆண்டுதோறும் ஏறத்தாழ 1 இலக்கம் சுற்றுப் போக்கர்கள் வருகின்றனர்; ஏறத்தாழ 50 இலக்கம் ஆத்திரேலிய தாலர்களை அவர்கள் அங்குச் செலவிடு கின்றனர்.

---

தென்மொழி மின் அச்சகம், சென்னை—600 005 (தமிழகம்).